மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 11-00]

2. தகவல் கோரல்

(அ) ஆயிரம் விளக்குத் தொகுதியில் ஏற்பட்டுள்ள தீ விபத்து.

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு கண்ணியத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆயிரம் விளக்குச் சட்டப் பேரவைத் தொகுதியில், 106-வது வட்டத்தில் சுதந்திரா நகர் என்ற பகுதியில், ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழ்கிற அந்தப் பகுதியில், 25-3-1987 அன்று காலை 11 மணியளவில் ஒரு பெரிய தீ விபத்து நிகழ்ந்துள்ளது. அதன் காரணமாகப் பல நூறு குடும்பங்கள் சொல்லொணாத் துயரத்திற்கு இன்று ஆளாகி யுள்ளனர். மாண்புமிகு எங்கள் இனிய தலைவர் முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களின் துணையுடன் நேற்று சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் (நாத் தழுதழுக்க) மற்றவர்கள் உதவி யுடன் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு ஓரளவுக்கு அந்தப் பகுதி மக்கள் உதவி பெற்றுள்ளார்கள். ஆனால் இன்று காலை பத்திரிகைகளில் பல்வேறு விதமான தகவல்கள் வெளியாகி யுள்ளன. எனவே உண்மை நிலவரங்களை இந்தப் பேரவை அறிய வும் — தீ விபத்துக்கு ஒரு குறிப்பிட்ட சிலரின் திட்டமிட்ட சதி காரணம் என்று பரவலாக அந்தப் பகுதியில் வாழ்கிற ஆதி திராவிட குடிசைவாழ் மக்கள் கூறுவதனால் அதில் ஏதாவது அடிப்படை உண்டா என்பதைக் குறித்தும் அரசு இதுவரை அங்கு எடுத்துள்ள, இனி எடுக்க இருக்கிற நிவாரண நடவடிக்கை கள் குறித்தும் அருள்கூர்ந்து ஒரு முழுமையான அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளித்து ஆயிரம் விளக்குத் தொகுதி மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை அளிக்க மாண்புமிகு அண்ணன் டாக்டர் நாவலர், நிதியமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25-3-1987 அன்று காலை 10.30 மணியளவில் ஆயிரம் விளக்குத் தொகுதியில் கிரீம்ஸ் ரோடு வணிக வரி அலுவலகக் கட்டிட வளாகத்தின் பின்புறம் அமைந்துள்ள சுதந்திராநகர் குடிசைப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது.

4 தீ அணைப்பு வண்டிகள் விரைந்து சென்று ½ மணி நேரம் போராடி தீயை அணைத்துவிட்டன. இந்த தீ விபத்தில் 212 குடிசைகள் தீக்கு இரையாகி விட்டன. தீ விபத்தால் உயிர் சேதமில்லை.

தீ விபத்து நடந்த இடத்தை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் எழும்பூர்-நுங்கம்பாக்கம் வட்ட ஆட்சியரும் நேரில் சென்று பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். சென்னை மாநகராட்சியும் பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கு மாற்று இடம் கொடுத்து உணவும் வழங்கி வருகிறது.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும் மற்றவர்களும் உடனடி உதவிகளை அங்கே சென்று புரிந்திருக்கிறார்கள். தீ விபத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ. 300-ம் குடும்பம் ஒன்றிற்கு 5 கிலோ அரிசியும் ஒரு வேட்டியும் புடவையும் இன்று கொடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நேற்றே மாநகராட்சி மன்ற ஆணையரும், சிறப்பு அலுவலரும் அங்கே சென்று பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மாதிரிப் பள்ளி சாலையில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு ரொட்டியும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. உணவுப் பொட்டலங்கள் இன்றும் நாளைக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விபத்து நடந்த அந்த இடத்தில் மின்விளக்கு மற்றும் சுற்றுப்புற சுகாதார வசதிகளும் உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வசதிக்கும் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற நிவாரணப் பணிகளை கவனிக்கும்படியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவரும் மாநகராட்சி அதிகாரிகளும் பணிக்கப்பட்டுள்ளனர்.

1987 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போன்று அந்த இடத்தில் தீ விபத்து திடீரென்று ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை காவல்துறை புலனாய்வு செய்து கொண்டிருக்கிறது. அது சதி செயலா, தற்செயலாக ஏற்பட்டதா என்பதெல்லாம் புலன் விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகுதான் அரசுக்குத் தெரியும். அப்படித் தெரிகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது இந்த அவைக்குத் தெரிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பொது மருத்துவமனையில் பெண் நோயாளி கற்பழிப்பு.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய 'தினமணி' நாளேட்டில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வந்த பெண்ணை கற்பழித்ததாக இரண்டு வார்டு ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. செவ்வாய் அன்று இரவு நெஞ்சு வலியின் காரணமாக அப்பெண்மணி அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்திருக்கிறார். அங்கே தீவிர சிகிச்சைப் பிரிவில் பரிசோதித்த பிறகு அங்கே எழுதிக் கொடுத்திருக்கிற மருந்துகளை பெறுவதற்காக இரண்டு வார்டு ஊழியர்களிடம் வழி கேட்டிருக்கிறார். வழி காட்டுவதாகச் சொல்லி தனியாக ஓர் இடத்திற்கு தீய எண்ணத்தோடு அழைத்துச் சென்று அங்கே மிருகத்தனமாக கற்பழித்திருக்கிறார்கள் என்ற செய்தியைப் படிக்கின்றபோது உண்மையிலேயே வேதனை தரக் கூடியதாக இருக்கிறது. அரசு மருத்துவமனையில் பணி புரியும் அரசுப் பணியாளர்களுக்கு இப்படிப்பட்ட தவறுகளை செய்ய ஏற்படும் அசாத்தியமான தைரியத்தை கண்டிப்பதோடு இந்த அவல நிலை பெண்கள் மட்டத்தில் அச்சத்திற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதால் எதிர்காலத்திலே மகளிருக்கு இப்படிப்பட்ட கேவலமான நிலை ஏற்படாத வண்ணம் உருவாக்க அரசு என்ன பாதுகாப்பை எப்படி கொடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். அந்த இரண்டு ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உங்கள் மூலமாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.